# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109495

1. District : திருச்சி மாவட்டம் | PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்நிலையம் | Year: 2023 ஆண்டு | FIR No.: 03 மு.த.அ. எண் | Date: 10.02.2023 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) | Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 07.02.2023 | Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 16.00 hrs | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.02.2023 | Time : நேரம் 07.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 4 கி.மீ மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி உதவி இயக்குநர் அலுவலகம் கனிமம் மற்றும் சுரங்கத் துறை திருச்சி மாவட்டம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மு. ஆல்பர்ட் | (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் பிச்சை

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 31.07.1965 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் – | Place of Issue : வழங்கப்பட்ட இடம் –

   (f) Occupation : தொழில் சுய தொழில் | (g) Address முகவரி எண். 14/12, ஆண்டாள் தெரு, ஐயப்பன் நகர், கே.கே. நகர், திருச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   தெ. பாந்தரன், உதவி இயக்குநர், கனிமம் மற்றும் சுரங்கத்துறை, திருச்சி மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பெற்றது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P.PIR 10/2/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 10/2/23
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. MANICANDAN.
Rank: நிலை DSP ... No எண் ... KKNC

***கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.***

***திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2023-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......***

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளராகிய நான், இன்று 10.02.2023 பணியில் இருந்த போது காலை 07.00 மணியளவில் திருச்சி மாவட்டம், கே.கே.நகர், ஐயப்பன் நகர், ஆண்டாள் தெரு, நெம்பர் 14/1ஏ என்ற முகவரியில் வசித்து வரும் பிச்சை மகன் பி.ஆல்பர்ட் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், கனிமம் மற்றும் சுரங்கத்துறை உதவி இய'குநர் திரு.ஸ்ரீதரன் மற்றும் புகார்தாரர் திரு.ஆல்பர்ட் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 10.02.2023 காலை 08.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.03/2023 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் பி.ஆல்பர்ட், த/பெ பிச்சை, நெம்பர்.14/1ஏ, ஆண்டாள் தெரு, ஐயப்பன் நகர், கே.கே.நகர், திருச்சி-21. பெறுநர் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், திருச்சி மாவட்டம். மதிப்பிற்குரிய அய்யா, நான், திருச்சி, கே.கே.நகர், ஐயப்பன்நகர், ஆண்டாள் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். திருச்சி திருவாணைக்கோவிலில் வசித்து வரும் எனது நண்பர் திரு.முரளிதரன் என்பவர் எனக்கு நண்பர். எனது மற்றும் திரு.முரளிதரன் பெயரில் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், 29, பூலாஞ்சேரி கிராமத்தில் சுமார் 25 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தில் நான்கில் ஒரு பங்கிற்கு நான் உரிமையாளராவேன். இந்த நிலத்தில் சர்வே எண்கள் 680/3 மற்றும் 680/5-ல் உள்ள 2.93 ஹெக்டேர் இடத்தில் மட்டும் கடந்த 2007-2011 ஆண்டில் கல்குவாரி நடத்தி வந்தோம். பின்னர் சில காரணங்களால் 2011-ம் ஆண்டிற்கு பிறகு கல்குவாரி நடத்தாமல் விட்டுவிட்டோம். இந்நிலையில், அந்த நிலத்தில் என் பெயரில் மீண்டும் கல்குவாரி நடத்தலாம் என நாங்கள் முடிவுசெய்தோம். அதற்காக அந்த நிலத்தை கடந்த 26.05.2022 அன்று முதல் 12 ஆண்டுகளுக்கான குத்தகை ஒப்பந்த பத்திரம் நாங்களிருவரும் செய்து கொண்டோம். பின்னர் அந்த நிலத்தில் கல்குவாரி தொடங்குவதற்காக கடந்த 2.06.2022 அன்று எனது விண்ணப்பம், அரசாங்க கட்டணம் செலுத்தியதற்கான இரசீது மற்றும் முறையான ஆவணங்களுடன் திருச்சி மாவட்ட பழைய ஆட்சியரக வளாகத்தில் உள்ள உதவி இயக்குநர், கனிமம் மற்றும் சுரங்கத்துறை அலுவலகத்தில் எனது விண்ணப்பத்தினை சமர்ப்பித்திருந்தேன். அதன்பேரில், உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்து எனது விண்ணப்பம் முசிறி கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரப்பெற்று, பிறகு முசிறி வட்டாட்சியர் அவர்களுக்கு கிடைக்கப் பெற்றது அதன்பேரில், முசிறி வட்டாட்சியரும், முசிறி வருவாய் கோட்டாட்சியர் அவர்களும் களஆய்வு முடித்து சுமார் இரண்டு மூன்று மாதங்களில் எனது விண்ணப்பமானது மீண்டும் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு வந்திருந்தது. எனது விண்ணப்பம் குறித்தான நிலை

என்னவென்று தெரிந்து கொள்ள ஜனவரி மாதத்தின் கடைசி வாரத்தில் ஒரு நாள் உதவி இயக்குநர், கனிமம் மற்றும் சுரங்கத்துறை அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த உதவி இயக்குநர் திரு.ஸ்ரீதரன் அவர்களை சந்தித்து எனது விண்ணப்பத்தின் நிலை குறித்து கேட்டேன். அப்போது திரு.ஸ்ரீதரன் அவர்கள் அப்ளிகேசன் போட்டுட்டு என்ன வந்து பாக்காம இருந்தீங்கன்னா, உங்களுக்கு பர்மிசன் வீடுதேடி வந்திருமான்னு கேட்டார். அதற்கு நான் அவரிடம், என்ன சார் செய்யணும் என்று கேட்டேன். அதற்கு அவர், பிப்ரவரி ஃபர்ஸ்ட் வீக்ல போன் பண்ணிட்டு, பீல்டு இன்ஸ்பெக்ஷன் வர்றேன், நீங்க கௌம்புங்க என்று சொன்னதும் நான் அங்கிருந்து வந்துவிட்டேன். பின்னர் கடந்த 7.2.2023 மதியம் சுமார் 12 மணியளவில் உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒரு அலுவலர் பேசுவதாகச் சொல்லி எனது செல்போனில் பேசிவிட்டு பின் உதவி இயக்குநர் திரு.ஸ்ரீதரன் பேசினார். அன்றே மாலை 4 மணிக்கு கள ஆய்வுக்கு வருகிறேன், உங்க இடத்தில் இருங்க என்று கூறினார். சொன்னபடி 7.2.2023 மாலை சுமார் 4 மணியளவில் எனது இடத்திற்கு ஜீப்பில் வந்த திரு.ஸ்ரீதரன் இடத்தை கள ஆய்வு செய்துவிட்டு என்னிடம், எல்லாம் சரியா இருக்கு, இனிமேல் நான் ரெக்கமன்டு பண்ணி ஆர்டர் போட வேண்டியதுதான், அதுக்கு உண்டான அமௌன்ட்ட ரெடி பண்ணிக்கிங்க என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், என்ன அமௌன்ட் சார், கவர்மெண்ட் பீஃசா சார் என்று கேட்டேன். அதற்கு திரு.ஸ்ரீதரன், அதெல்லாம் இல்ல, உங்களுக்கு ஆர்டர் போடனும்னா, அதுக்கு 5 லட்ச ரூபா எனக்கு தனியா ரெடி பண்ணிக்கிங்க வர்ற வெள்ளிக்கிழமை 3 லட்சம் ரூபா அட்வான்சா கொடுத்திடுங்க, மிச்சம் 2 லட்சத்த ஆர்டர் போட்டதும் கொடுங்க போதும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் அமௌன்ட் அதிகமா இருக்கே சார் என்று சொன்னேன். அதற்கு அவர், இதுக்கெல்லாம் பேரம்பேச முடியாதுங்க என்று கண்டிப்பாக கூறினார். அப்போதைக்கு நான் வேறு வழியில்லாமல் அவரிடம் சரிங்க சார் வருகிறேன் என்று சொன்னதும், இனிமேலும், லேட் பண்ணாதீங்க வெள்ளிக்கிழமை பணத்தோட வந்திடுங்க என்று சொல்லிவிட்டு ஜீப்பில் கிளம்பிச் சென்றுவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. என்னிடம் லஞ்சம் கேட்ட கனிமம் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் திரு.ஸ்ரீதரன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (பி.ஆர்பர்ட்) 10.2.2023 Submitted to the Court of Hon,ble Special Judge, Special court for the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 07.00 hrs on 10.02.2023 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.03/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 08.00 hrs on 10.02.2023. Sd.xxx (G.Manikandan) 10.02.2023 Dy.Supdt of Police, V&AC, Trichy.

10/2/23
DSP V&AC Trichy.
(G.MANIKANDAN)